சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 10.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 54/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | அமுதா |
| கணவர் பெயர் | : | இளங்கோ |
| கிராமம் | : | திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| வயது | : | 57 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் வசிக்கும் பகுதியில் சுமார் 50 வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா-2 மனோகரன் என்பவர் 1ம் எதிரியின் அக்கா

மகன் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் பகுதியில் எனக்கு சொந்தமாக மொத்தம் 3 வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் ஒரு வீட்டை அ.சா-2 மனோகரன் என்பவருக்கு ரூ.1,00,000/- பெற்றுக்கொண்டு ஒத்திக்கு கொடுத்துள்ளேன் என்று சொன்னால் ஆமாம். மேற்படி பணம் கொடுக்கள் வாங்கள் சம்மந்தமாக எனக்கு அ.சா-2க்கும் பிரச்சனை இருந்தது என்று சொன்னால் இல்லை. நான் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் இருந்து வந்து வாக்குமூலம் பெற்று புகாரை பதிவு செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். அதன் பின்னர் 10 நாட்கள் கழித்து திருத்துறைப்பூண்டி காவல் நிலையம் சென்று அங்கு ஒரு புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். போலீசார் சாட்சிகளிம் கையொப்பம் பெற்றார்கள். எதிரி வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. புகாரை யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது என்றால் வெளி நபரை வைத்து புகார் எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தேன். போலீசாரிடம் நான் புகார் கொடுத்தபின்னர் 2,3 பேப்பரில் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. புகாரில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது என்று சொன்னால் எனக்கு தெரியும். அ.சா.ஆ-1 ஆன புகாரில் அடித்தல் திருத்தல் இருந்ததா என்றால் தெளிவாக தான் இருந்தது. அ.சா.ஆ-1 ஆன புகாரில் அடித்தல் திருத்தல் உள்ளது என்று சொன்னால் எனக்கு படிக்க தெரியாது. எனது மகன் பெயர் தினேஷ் என்று சொன்னால் ஆமாம். ONGS-ல் வேலை செய்கிறார் என்றால் இல்லை. பெரம்பலூரில் உள்ள SRM கல்லூரியில் சமையல் வேலை செய்து வருகிறார். அ.சா-2 மனோகரனுக்கு தாங்கள் கொடுக்கவேண்டிய தொகை சம்மந்தமாக பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா-2 மனோகரனுக்கு தாங்கள் ஒத்த பணமான ரூ.100000/- பணத்தை கொடுக்காமல் காலம் தாழ்த்தியதால் ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டு 1ம் எதிரி சாந்தி என்பவர் எனக்கு எதிராக

சொன்னதால் அவர்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் 2 மற்றும் 3 எதிரிகள் வெளிநாட்டில் இருந்தார்கள் என்று சொன்னார் சரியல்ல. ஆஜர் எதிரிகள் என்னை சாதியை சொல்லி திட்டவில்லை என்றும், கீழே உதைத்து தள்ளவில்லை என்றும், கெட்ட வார்த்தையால் திட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தங்கள் வீட்டிற்கு எதிரிகள் வரவில்லை என்றால் சரியல்ல. தற்போது முதல் விசாரணையில் தாங்கள் சொன்ன சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.10 17:09:50 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.